# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 5, கோயம்புத்தூர்

முன்னிலை: திரு. V.L. சந்தோஷ், M.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண். 5,
கோயம்புத்தூர்.

## ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 2641/2022

**CNR.NO.TNCBOA**-035526-2022

**2024 ஆம் வருடம் ஜூலை மாதம் 4 ஆம் நாள் வியாழக்கிழமை**

**2055 திருவள்ளுவராண்டு குரோதி வருடம் ஆனி மாதம் 20 ஆம் நாள்**

அரசுக்காக காவல் உதவி ஆணையர்,
பி4 உக்கடம் காவல் நிலையம்,
காவல்நிலைய குற்ற எண் 635/2020 … குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

கஜேந்திரன், (48/2020)
த/பெ. கோபால்,
1735, 19 வது பிளாக்,
புல்லுக்காடு ஹவுசிங் யூனிட்,
தெற்கு உக்கடம்,
கோயம்புத்தூர். … எதிரி

இந்த வழக்கு 24.11.2022 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 24.6.2024 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தது. இவ்வழக்கில் அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமிகு. M. ஷீரின் சித்தாரா ஸ்வீட்டி அவர்கள், எதிரி தரப்பில் இலவச சட்ட உதவி மைய உதவி வழக்கறிஞர் திருமிகு. J. கனிமொழி அவர்கள் ஆஜராகியுள்ளனர். ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இரு தரப்பிற்கும்

வாதுரை சமர்ப்பிப்பதற்காக 2.7.2024 வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டும், எதிரி தரப்பில் எழுத்து மூலமான வாதங்கள் தாக்கல் செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது கோவை பி4 உக்கடம் காவல்நிலையம், காவல் உதவி ஆணையர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173(2) இன் கீழ் 29.8.2022 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 295-A, 153-A மற்றும் 298 இன் கீழான குற்றச்சாட்டுகளுக்காக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்காகும்.

**<u>1) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :</u>**

கடந்த 18.07.2020 ஆம் தேதி அதிகாலை 03.00 மணியளவில் எதிரி அவரது TVS XL TN 99 K 2532 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் NH சாலையில் உள்ள ரேமண்ட்ஸ் துணிக்கடைக்கு எதிரே உள்ள ஸ்ரீ மாகாளியம்மன் கோவிலுக்கு வந்து முஸ்லீம் மற்றும் இந்து மதங்களுக்கிடையில் தவறான எண்ணம் மற்றும் மத சீற்றம் மற்றும் இந்துக்களின் மத உணர்வுகளை புண்படுத்த வேண்டுமென்ற தீய நோக்கத்துடன் அந்த ஆலயத்தின் எதிரே உள்ள வேல்கம்பு அருகே ஒரு டயரை வைத்து பகை, வெறுப்பு உணர்வுகளை உண்டாக்கும் நோக்கத்துடன் தீ வைத்த குற்றத்திற்காக சின்னராயப்பன் (எ) பரமானந்தம் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமானப் புகாரைப் பெற்று அதனடிப்படையில் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 295, 295-A, 153-A மற்றும் 436 இன் கீழ் குற்ற எண் 635/2020 என்ற எண்ணில் 18.7.2020 ஆம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 295-A, 153-A மற்றும் 298 இன் கீழ் பி4 உக்கடம் காவல் நிலைய காவல் உதவி ஆணையர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173(2) இன் கீழ் இறுதி அறிக்கை 29.8.2022 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. காவல் துறையினரால் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையினை பரிசீலனை செய்து கு.வி.மு.ச. பிரிவு 190(1)(b) இன் படி இந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண் 2641/2022 ஆக 24.11.2022 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. எதிரி முன்னிலையானவுடன் இந்த வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி 16.5.2023 ஆம் தேதி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய அவகாசம் வழங்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்து பார்த்த போது, எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்தரம் இருப்பதாக தோன்றியதால், 30.5.2023 ஆம் தேதி எதிரியிடம் இ.த.ச. பிரிவுகள் 295-A, 153-A மற்றும் 298 இன் கீழான குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்டு, குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி வினவிய போது, எதிரி தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டை மறுத்து வழக்கு விசாரணை வேண்டினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. இவ்வழக்கில் எதிரி கடந்த 19.7.2020 ஆம் தேதி நீதிமன்ற காவலுக்குட் படுத்தப்பட்டுள்ளார். மேற்படி எதிரி நீதிமன்ற காவலில் இருந்த போது கடந்த 29.1.2022 முதல் 2.5.2023 வரை நீதிமன்ற காவலில் இருந்து தப்பிச் சென்றுவிட்டார் என்று, 2.5.2023 அன்று முதல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

5. இவ்வழக்கில் பி.ஆர்.எண். 307/2020 - இல் கண்ட வழக்குச்சொத்தான TN 99 K 2532 (வரிசை எண் 2) இருசக்கர வாகனத்தினை அதன் உரிமையாளரான சுப்ரமணி என்பவர் இந்த நீதிமன்றத்தில் மனு செய்து C.M.P. No. 26213/2021 என்ற மனுவில் கடந்த 6.12.2021 ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் இடைக்கால பொறுப்பில் பிணை உறுதி எழுதிக் கொடுத்து பெற்றுச் சென்றுள்ளார்.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.14 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.17 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7. **அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்** :

7.1. **அ.சா.1 சின்னராயப்பன் (எ) பரமானந்தம்** தன்னுடைய சாட்சியத்தில் 18.7.2020 அன்று தான் தலைவராக உள்ள மாகாளியம்மன் கோவில் முன்பு தீ எரிந்து கொண்டிருந்ததாக கோவிலை சுத்தம் செய்யும் கனகு என்பவர் தெரிவித்து தெரிந்து கொண்டதாகவும், கோட்டை ஈஸ்வரன் கோவில் அருகில் பால் கடை வைத்திருக்கும் பால் காரரும் இது குறித்து தனக்கு தகவல் தெரிவித்ததாகவும், அங்கு சென்று பார்த்த போது தீ எரிந்து கொண்டிருந்தது என்றும், இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

7.2. **அ.சா.2 சஞ்சீவ்குமார் (எ) வெங்கடேஷ்** தன்னுடைய சாட்சியத்தில் தங்கள் சமுதாய திருக்கோவிலான மாகாளியம்மன் திருக்கோவிலில் 18.7.2020 அன்று அதிகாலையில் டயர் எரிந்து கொண்டிருப்பதாக அங்கு சுத்தம் செய்யும் கனகு என்பவர் தகவல் தெரிவித்ததாகவும், உடனே அங்கு சென்று தீ எரிந்ததை அனைத்ததாகவும், சலீம் என்பவர் எதிரி தான் தீ வைத்ததாக தன்னிடம் தகவல் தெரிவித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

7.3. **அ.சா.3 கனகு** 18.7.2020 அன்று மாகாளியம்மன் கோவிலை சுத்தம் செய்ய சென்ற போது அங்கு டயரை எரித்துவிட்டதாகவும், திரைச் சீலைகள் எரிந்திருந்ததாகவும், அதைப் பார்த்து சத்தம் போட்டு சஞ்சீவ், முருகானந்தம் ஆகியோரிடம் தெரிவித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.4. **அ.சா.4 முரளி** 18.7.2020 அன்று மாகாளியம்மன் கோவிலின் சூலாயுதம் அருகில் டயர் இருந்ததாகவும், அங்கு பதற்றமான சூழல் இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.5. **அ.சா.5 ராஜாசெல்வம்** கண்காணிப்பு கேமரா பதிவுகளை உரிய சான்றுடன் காவல் துறையிடம் ஒப்படைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

7.6. **அ.சா.6 ராமச்சந்திரன்** தான் பணிபுரிந்து வரும் கடையில் கண்காணிப்பு கேமரா பதிவுகளை காவல் துறையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க 18.7.2020 காலை 2.30 மணி முதல் 3 மணி வரை பதிவாகியிருந்த வீடியோ பதிவுகளை உரிய சான்றுடன் காவல் துறையினரிடம் ஒப்படைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

7.7. **அ.சா.7 கணேசன்** சம்பவ இடத்தில் டயர் எரிந்து கிடந்ததை பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

7.8. **அ.சா.8 ராஜகோபால்** ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் இட்டது குறித்தும், கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் இட்டது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.9. **அ.சா.9 அன்புவேல்** ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் இட்டது குறித்தும், கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் இட்டது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.10. **அ.சா.10 மணிகண்டன்** பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் இட்டது குறித்தும், கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் இட்டது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.11. **அ.சா.11 சண்முகவேல்** பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் இட்டது குறித்தும், கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் இட்டது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.12. **அ.சா.12 ராஜவேல்** இந்த வழக்கில் தான் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

7.13. **அ.சா.13 சௌந்திரராஜன்** இந்த வழக்கில் தான் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**7.14. அ.சா.14 பார்த்திபன்** இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்தது தொடர்பாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) இன் படி 24.6.2024 ஆம் தேதி வினவிய போது, எதிரி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பொய் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். எனவே தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

9. **தீர்வுக்குரிய பிரச்சனை**

**எதிரி மீது அரசு தரப்பால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கையின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் இ.த.ச. பிரிவுகள் 295-A, 153-A மற்றும் 298 இன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளன. மேற்கண்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை.**

**தீர்வு**

**10.** எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் கடந்த 18.7.2020 அதிகாலை 3 மணியளவில் எதிரி தன்னுடைய **TN** 99 **K** 2532 பதிவெண் கொண்ட **TVS XL** இருசக்கர வாகனத்தில் வந்து **NH** சாலையிலுள்ள ரேமண்ட்ஸ் துணிக்கடைக்கு எதிரே உள்ள ஸ்ரீ மாகாளியம்மன் கோவிலுக்கு அருகே வந்து இந்து மற்றும் முஸ்லீம் மதத்தினருக்கிடையே வன்முறையை ஏற்படுத்தும் வண்ணம் வேல் கம்பு அருகே ஒரு டயரை வைத்து தீ வைத்து குற்றம் புரிந்துள்ளார் என்பதும், அதன் தொடர்ச்சியாக மத வெறுப்புணர்வை தூண்ட வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டுள்ளார் என்றும், மேற்கண்ட செயல் இ.த.ச. பிரிவுகள் 295-A, 153-A மற்றும் 298 இன் கீழ் இந்நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்கதும், தண்டிக்கத்தக்கதுமான குற்றச் செயல் என்பதும் ஆகும்.

11. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள 14 சாட்சிகளில் எதிரி கஜேந்திரன் தான் மேற்கண்ட ஸ்ரீ மாகாளியம்மன் கோவிலில் உள்ள வேல் கம்பு எதிரே டயரை எரித்தார் என்பதை கண்ணுற்றதாக சாட்சியம் ஏதும் முன்னிடப்படவில்லை. அ.சா.2 சஞ்சீவ் குமார் (எ) வெங்கடேஷ் தன்னுடைய சாட்சியத்தில் சம்பவத்திற்கு பின்னர் கோவிலில் இருந்த போது அந்த வழியாக வந்த சலீம் என்பவர் புல்லுக்காட்டைச் சேர்ந்த ஆஜர் எதிரி கஜேந்திரன் தான் தீ வைத்ததாக தன்னிடம் தெரிவித்தார் என சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட சலீம் சாட்சியப் பட்டியிலில் இரண்டாவது சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ளார். ஆனால் அவர் அரசு தரப்பில் ஒரு சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அதற்கான காரணம் ஏதும் அரசு தரப்பால் முன்னிடப்படவில்லை.

12. அரசு தரப்பில் முன்னிடப்பட்டுள்ள அ.சா.ஆ.4, அ.சா.பொ.1, அ.சா.அ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆகியவற்றின் அடிப்படையில் எதிரி தான் டயரை சம்பவ இடத்தில் எரித்தார் என எந்த விபரமும் எடுத்துரைக்கப்படவில்லை. அ.சா.1 புகாரை தான் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.ஆ.1 புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். தான் கைப்பட புகார் ஏதும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், அதை எழுதியது எந்த போலீஸ் என்பது தனக்கு நினைவில் இல்லை என்றும், எத்தனை பக்கம் என்பதும் தனக்கு நினைவில் இல்லை என்றும், புகாரை யார் தட்டச்சு செய்தது என்பதும் தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட சாட்சியத்தின் மூலமாக அ.சா.ஆ.1 உறுதியூட்டப்படவில்லை என்பது தெளிவாகிறது.

13. அ.சா.2 சஞ்சீவ் குமார் (எ) வெங்கடேஷ் தன்னுடைய சாட்சியத்தில் தான் புகார் கொடுத்ததாகவும், தான் சொன்ன புகாரின் அடிப்படையில் தான் சாட்சியம் அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் அரசு தரப்பு வழக்கின் படி சம்பவம் குறித்து அ.சா.1 புகார் கொடுத்துள்ளார். இது தொடர்பாக ஏற்பட்டுள்ள முரண்பாட்டை விளக்கும் வகையில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.சாஸ்தா சோமசேகரன் ஒரு சாட்சியாக அரசு தரப்பால் விசாரிக்கப்படவில்லை.

**14.** எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையான சாட்சிகள் அனைவரும் சம்பவம் குறித்து கேள்விப்பட்ட சாட்சிகள் என்றும், அதனால் அவர்களுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றும் வாதிட்டார். ஸ்ரீ மாகாளியம்மன் கோவில் அருகில் 18.7.2020 அன்று அதிகாலையில் டயரை எரித்து விட்டார்கள் என்றும், திரைச் சீலைகள் எரிந்திருந்தன என்றும் அதனை தான் பார்த்ததாக அ.சா.3 கனகு சாட்சியம் அளித்துள்ளார். மற்ற அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.4 முதல் அ.சா.7 வரையான அரசு தரப்பு சாட்சிகள் அனைவரும் அதன் பின்னர் சம்பவ இடம் சென்று பார்த்தவர்கள்.

**15.** அ.சா.8 ராஜகோபால் மற்றும் அ.சா.9 அன்புவேல் இருவரும் எதிரி கஜேந்திரன் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கிய போது உடனிருந்த சாட்சிகள் என்பது அரசு தரப்பு வழக்கு. **TVS XL** வாகனத்தையும், ஜெர்கினையும் தங்கள் முன்னிலையில் கைப்பற்றியதாக மேற்கண்ட இருவரும் சாட்சியம் அளித்துள்ளனர். அரசு தரப்பு வழக்கின் படி எதிரி கஜேந்திரனிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து அவர் ஆஜர் செய்த அ.சா.ஆ.8 இருசக்கர வாகனம் மற்றும் அ.சா.பொ.1 ஜெர்கின் ஆகியவற்றிற்கும் எதிரி தான் குற்றச் செயலில் ஈடுபட்டார் என்பதற்கும் தொடர்பு உள்ளது என்பது ஆகும்.

**16.** ஆனால் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள் அ.சா.12 முதல் அ.சா.14 வரையான சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து, கண்காணிப்பு கேமரா பதிவுகளிலிருந்தும் எதிரி குற்றச் செயலில் ஈடுபட்டார் என்று சந்தேகப்பட்டு எதிரி கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிய வருகிறது. அ.சா.12 புலன் விசாரணை அதிகாரி கண்காணிப்பு கேமரா பதிவில் அந்த பகுதியில் எதிரி வந்து செல்வதை பார்த்ததாக தெரிவித்துள்ளார். அ.சா.14 புலன் விசாரணை அதிகாரி தான் பார்வையிட்ட கண்காணிப்பு கேமரா பதிவில் எதிரி இருந்தாரா என்பது சரியாக நினைவில் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 குறிப்பிட்டுள்ள பால்காரரை தான் விசாரிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். அ.சா.12 புலன் விசாரணை அதிகாரி பால்காரரை தான் விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட சாட்சியங்களிலிருந்து எதிரி கஜேந்திரனுக்கும், இந்த வழக்கின் குற்றச் செயலுக்குமான தொடர்பு என்பது அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது.

**17.** ஏற்கனவே இந்நீதிமன்றம் விவாதித்ததன் படி கஜேந்திரன் தான் டயரில் தீ வைத்தார் என்பதை தான் பார்த்ததாக அ.சா.2 வெங்கடேஷிடமும், புலன் விசாரணை அதிகாரியிடமும் தெரிவித்ததாக சொல்லும் முகமது சலீமை ஒரு சாட்சியாக அரசு தரப்பு விசாரிக்கவில்லை. மேலும் அ.சா.2 குறிப்பிட்ட பால்காரரையும் ஒரு சாட்சியாக விசாரிக்கவில்லை. மேற்கண்ட விவாதங்களிலிருந்து 18.7.2020 அன்று ஸ்ரீ மாகாளியம்மன் கோவிலில் டயரை தீ வைத்து எதிரி குற்றச் செயலில் ஈடுபட்டார் என்பது அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. மேலும் இரண்டு மதப்பிரிவினருக்கிடையே வெறுப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரி குற்றச் செயலில் ஈடுபட்டார் என்பதும் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. மேலும் எதிரி கஜேந்திரன் சம்பவ இடத்தில் இருந்தார் என்பதோ, மத உணர்வுகளை புன்படுத்தும் வகையில் யாரேனும் நபர் முன்னிலையில் செயல்பட்டார் என்பதோ அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

**18.** எனவே எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவுகள் 295-**A**, 153-**A** மற்றும் 298 இன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாத நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக வழங்குவதே உகந்தது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**19.** இறுதியாக, எதிரி இ.த.ச. பிரிவுகள் 295-**A**, 153-**A** மற்றும் 298 இன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**20.** இவ்வழக்கில் பி.ஆர்.எண். 307/2020 - இல் கண்ட வழக்குச்சொத்தான **TN** 99 **K** 2532 (வரிசை எண் 2) இருசக்கர வாகனத்தினை அதன் உரிமையாளரான சுப்ரமணி என்பவர் இந்த நீதிமன்றத்தில் மனு செய்து **C.M.P. No**. 26213/2021 என்ற மனுவில் கடந்த 6.12.2021 ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் இடைக்கால பொறுப்பில் பிணை உறுதி எழுதிக் கொடுத்து பெற்றுச் சென்றுள்ளார்.

**20.1.** இவ்வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி இருசக்கர வாகனத்தின் மீதுள்ள சுப்ரமணி என்பவரின் உரிமையைப் பொறுத்து எதிரி தரப்பு எவ்வித ஆட்சேபணையும் எழுப்பவில்லை. எனவே மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு மேற்படி வழக்குச் சொத்தான இருசக்கர வாகனத்தினை அதன் உரிமையாளரான சுப்ரமணி என்பவர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளதை தொடர்ந்து அவரே வைத்துக்கொள்ள உத்தரவிட்டும், மேலும் சுப்ரமணி நீதிமன்றத்தில் எழுதிக் கொடுத்துள்ள பிணைப்பத்திரம் மேல்முறையீடு காலத்திற்கு பிறகு ரத்தாகிவிடும் என்றும் கு.வி.மு.ச. பிரிவு 452 இன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

**20.2.** இவ்வழக்கில் பி. ஆர். எண். 307/2020 - இல் கண்ட வழக்குச் சொத்துக்களான ஜெர்கின் (வரிசை எண் 3) மற்றும் கரிந்த துகள்கள் (வரிசை எண் 1) ஆகியவை அரசு தரப்பில் முறையே அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 சான்றுபொருட்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 சான்றுபொருட்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

**20.3.** இவ்வழக்கில் பி. ஆர். எண். 307/2020 - இல் கண்ட வழக்குச் சொத்துக்களான எதிரி கஜேந்திரனின் ஆதார் கார்டு (வரிசை எண் 4), கஜேந்திரனின் குடும்ப அட்டை (வரிசை எண் 5), எதிரியின் பழைய இந்திய தேர்தல் ஆணையம் அடையாள அட்டை (வரிசை எண் 6), எதிரியின் ஓட்டுனர் உரிமம் (வரிசை எண் 7) மற்றும் CD-க்கள் எண்ணிக்கை 3 (வரிசை எண் 8 முதல் வரிசை எண் 10) ஆகியவற்றை வழக்கு கோப்பில் வைக்க கு.வி.மு.ச. பிரிவு 452 இன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V L SANTHOSH

Digitally signed by V L SANTHOSH
Date: 2024.07.04 17:49:27 +0530

நீதித்துறை நடுவர் எண். 5,
கோயம்புத்தூர்.

**அட்டவணை :**

**அரசு தரப்பு சாட்சிகள்** :

| சாட்சி எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர் | முதல் விசாரணை செய்த தேதி | குறுக்கு விசாரணை செய்த தேதி |
|---|---|---|---|
| அ.சா.1 | திரு. சின்னராயப்பன் (எ) பரமானந்தம் (புகார்தாரர்) | 27.06.2023 | 28.11.2023 |
| அ.சா.2 | திரு. சஞ்சீவ்குமார் (எ) வெங்கடேஷ் | 27.06.2023 | 28.11.2023 |
| அ.சா.3 | திருமிகு. கனகு | 10.07.2023 | 21.12.2023 |
| அ.சா.4 | திரு. முரளி | 10.07.2023 | 28.11.2023 |
| அ.சா.5 | திரு. ராஜசெல்வம் | 24.07.2023 | 21.12.2023 |
| அ.சா.6 | திரு. ராமச்சந்திரன் | 21.08.2023 | இல்லை |
| அ.சா.7 | திரு. கணேசன் | 15.09.2023 | 21.12.2023 |
| அ.சா.8 | திரு. ராஜகோபால் | 01.02.2024 | 05.04.2024 |
| அ.சா.9 | திரு. அன்புவேல் | 01.02.2024 | 05.04.2024 |
| அ.சா.10 | திரு. மணிகண்டன் | 01.02.2024 | 05.04.2024 |
| அ.சா.11 | திரு. சண்முகவேல் | 01.02.2024 | 05.04.2024 |
| அ.சா.12 | திரு. ராஜவேல் | 07.05.2024 | 07.05.2024 |
| அ.சா.13 | திரு. சௌந்தரராஜன் | 15.05.2024 | 15.05.2024 |
| அ.சா.14 | திரு. பார்த்திபன் (புலன் விசாரணை அதிகாரி) | 24.05.2024 | 24.05.2024 |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :

அ.சா.ஆ.1 - புகார்

அ.சா.ஆ.2 - அ.சா.5 ராஜசெல்வம் வழங்கிய இந்திய சாட்சி சட்டம் பிரிவு 65-B இன் படியான சான்றிதழ்

அ.சா.ஆ.3 - அ.சா.5 ராஜசெல்வம் வழங்கிய சி.சி.டி.வி. கேமரா பதிவுகள் அடங்கிய சிடி

அ.சா.ஆ.4 - அ.சா.6 ராமச்சந்திரன் வழங்கிய இந்திய சாட்சி சட்டம் பிரிவு 65-B இன் படியான சான்றிதழ்

அ.சா.ஆ.5 - ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2 வது சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ.6 - கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2 வது சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ.7 - ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ.8 - இருசக்கர வாகனம் உள்ள ஒளிப்படங்கள் எண்ணிக்கை 3

அ.சா.ஆ.9 - பார்வை மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ.10 - கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ.11 - பார்வை மகஜர்

அ.சா.ஆ.12 - கைப்பற்றுதல் மகஜர்

அ.சா.ஆ.13 - மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.14 - படிவம் 91 (5 எண்ணிக்கை)

அ.சா.ஆ.15 - சோதனைப் பட்டியல்

அ.சா.ஆ.16 - இறுதி அறிக்கை தாக்கல் செய்ய அனுமதி வழங்கப்பட்ட அரசாணை

அ.சா.ஆ.17 - சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**அரசு தரப்பு சான்று பொருட்கள்** :

அ.சா.பொ.1 - ஜெர்கின்

அ.சா.பொ.2 - கரிந்த துகள்கள்

**எதிரி தரப்பு சாட்சிகள்** : இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்** : இல்லை

**பின்குறிப்பு :**

1. வழக்கு விசாரணையின்போது எதிரி சிறையில் நீதிமன்ற காவலில் இருந்து வருகின்றார்.
2. சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. முடிவு அறிக்கை காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. எதிரி விடுதலை செய்யப்பட்டார்.
5. வழக்குச்சொத்து பற்றிய உத்தரவு சொத்து பதிவேட்டில் பதியப்பட்டது.

V L SANTHOSH

Digitally signed by V L SANTHOSH
Date: 2024.07.04 17:49:37 +0530

நீதித்துறை நடுவர் எண். 5,
கோயம்புத்தூர்.